# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,909 — 1932 ம் ௵ மாசி ௴ 26 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV. - நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் விளம்பரம்.

**1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியாபரிபாலன கட்டளைச்சட்டம்.**

"1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியாபரிபாலன கட்டளைச்சட்டத்தின் 25 ம் பிரிவின்படி இரத்தினபுரி அரசிறை வருமானப் பிரிவின் பரிபாலனசபையால் செய்யப்பட்டு வித்தியாசங்கத்தின் அங்கீகாரம் பெற்று 1931 ம் ஆண்டின் இலங்கை (இராச்சிய மந்திரசபையின்) ஆலோசனைச் சபையிற் செய்த கட்டளையின் 93 ம் பிரமாணத்தின்படி அவர் மீது வைத்துள்ள அதிகாரத்தின்படி உத்தம தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட உபவிதி.

உத்தமனுர் கட்டளைப்படி,
சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா,
வித்தியா மந்திரி.

வித்தியா மந்திரி கந்தோர்,
கொழும்பு, 1932 ம் ௵ மாசி ௴ 24 ந் உ.

உபவிதி.

1927 ம் ஆண்டு நவம்பர் ௴ 4 ந் தேதியையுடைய 7,613 ம் இலக்க இலங்கைக் கவண்மேந்துக் கசெற் பத்திரிகையில் 1927 ம் ஆண்டு ஒக்டோபர் ௴ 29 ந் தேதியைக்கொண்டு பிரசுரிக்கப்பெற்ற உபவிதிகளின் 4 ம் விதியின் 1 ம் பந்திக்குப் பதிலாகப் பின்வருவது சேர்த்துக்கொள்ளப்படுகின்றது :—

4. பாடசாலைக்குப் போகவேண்டிய பிள்ளைகள்—6 வயசுக்குக் குறையாத அல்லது 14 வயசுக்குக் கூடாத ஒவ்வொரு சிறுவனின் பெற்றோரும் 6 வயசுக்குக் குறையாத அல்லது 12 வயசுக்குக் கூடாத ஒவ்வொரு சிறுமியின் பெற்றோரும் அல்லது முஸ்லீம் அல்லது தமிழ்ச் சிறுமிகளானால் 6 வயசுக்குக குறையாத அல்லது 10 வயசுக்குக் கூடாதவர்களாயுமுள்ள சிறுமிகளின் பெற்றோரும் அச்சிறுவன் சிறுமியின் கல்விக்காகப் போதியதும் தகுந்ததுமான வேறு ஒழுங்குகள் செய்திருந்தாலொழிய அல்லது பாடசாலைக்குப் போகாதிருப்பதற்கு நியாயமான காரணம் இருந்தாலொழிய அச்சிறுவனை அல்லது சிறுமியைப் பாடசாலைக்குப் போகச் செய்யவேண்டும். ஆயின், அங்கே புறம்பாக ஒரு பெண் உபாத்தி ஏற்படுத்தப்பட்டிருந்தாலொழிய சிறுமிகளின் வரவு கட்டாயமானதல்ல. மேலும், 8 வயசுக்குக் கீழான சிறுவனுவது சிறுமியரிலெவராவது தம் தம் வாசஸ்தலத்திலிருந்து அதிகிட்டிய பாதையால் 1 கட்டை தூரத்துக்கப்பாலுள்ள பாடசாலைக்குப் போகவேண்டுமென்ற கட்டாயமில்லை. இன்னும் 8 வயசுக்கு மேற்பட்ட சிறுவன் 2 கட்டை தூரத்துக்கப்பாலுள்ள பாடசாலைக்குப் போகவேண்டுமென்ற கட்டாயமுமில்லை.

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பனன்வல கிராமத்துக்கு ஒரு இடுகாட்டுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 9,153. குறிச்சி—பனன்வல, சந்தகா கோறளை வடக்கு, பாத்தகீவ கெற்ற.

| துண்டு. | காணியினது பெயர் | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப |
|---|---|---|---|---|
| 1 | கொறககாகொல்லகேன அல்லது எலமல்தெனிய | தோட்டம் .. | எச். எம். புஞ்சிறத்திளவண்டா, பனன்வல .. | 0 2 17·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ ஏபிரில் (சித்திரை) மாசம் 1 ந் தேதியிலன்று 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1932 ம் ௵ பெப்ருவரி ௴ 22 ந் ௳.

டபின்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கிறமலுயா நீர்ப்பாய்ச்சலுக்காக நலகாம கட்டு கட்டுவதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 288. குறிச்சி—அறன்வெலி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1A | அறன்வெலி .. | வயலும் மண்வெட்டின இடமும் .. | ஜே. டீ. றத்னதுங்க | 0 | 0 | 8·4 |
| 1B | வலதுபிறத்தி வாய்க்கால் | இறிகேசன்கட்டும் வாய்க்காலும் .. | ஷை .. | 0 | 0 | 19·5 |
| 1C | அறன்வெலி .. | வெண்காணியும், தண்ணி பிறதலாகிற இடம் | ஷை .. | 0 | 0 | 25·1 |
| 1D | ஷை .. | ஓடையும் வெண்காணியும் .. | ஷை .. | 0 | 0 | 2·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ அப்றெல் மாசம் 4 ந் தேதியிலன்று 10 மணிக்கு தங்காலை தானயத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்மாந்தோட்டை கச்சேரி,
1932 ம் ௵ பெப்ருவரி ௴ 22 ந் ௳.

பீ. ஸரவணமுத்து,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தட்டுவான்கொட்டியில் ஒரு புது கிணறு கட்டுவதாகிய பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 8,172. குறிச்சி—தட்டுவான்கொட்டி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | செல்வியர்கூந்தறை .. | நெல்காணி ஓர் துரவு உண்டு | திருநாவுக்கரசியின் மனைவி மங்கையர்கரசி, துன்னாலை | 0 | 0 | 33·75 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 1·61 |
| 3 | குமன்குடா .. | நெல்காணி .. | வல்லிபுரம் நாகமுத்து, மீசாலை வடக்கு .. | 0 | 0 | 3·29 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ பங்குனி மாசம் 31 ந் தேதியிலன்று 10 மணிக்கு ஆனையிறவு வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படிக்கும் மேற்படி காணியின் உறுதிகளை கொணர்ந்து காட்டும்படிக்கும் இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணக் கச்சேரி,
1932 ம் ௵ மாசி ௴ 22 ந் ௳.

ஈ. றீ. டைசன்,
அரசாட்சி ஏசண்டு, வடமாகாணம்.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மூதூர் ஆண்களுக்குக கக்கூசு கட்டுவதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 6,774 குறிச்சி—மூதூர் (முஸ்லிம்).

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | மூத்தநயினாகுளத்தடிவளவு | தென்னந்தோட்டம் .. | எம். அசனார் லெவ்வையின் உருத்தாளர்களும் இன்னும் ஒருவரும் | 0 | 0 | 4·22 |
| 3 | ஷை .. | வெறுநிலம் .. | ஷை .. .. | 0 | 0 | 2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ௵ சித்திரை மாசம் 8 ந் தேதியிலன்று காலை 9.30 மணிக்கு மூதூர் கிராமக்கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திரிகோணமலைக் கச்சேரி,
1932 ம் ௵ மாசி ௴ 23 ந் ௳.

எவ். சி. ஜிம்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் உடப்பேருவை அரசாட்சிப் பாடசாலையினது தோட்டத்தை பெருப்பிக்கிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரிவு அளவுப் பிரதமபடத்து இல. 437. முற்பிரதி 1. குறிச்சி—உடுக்கிந்த டிவிஷன் டெகிவினிபலாத்தை உவெலியராவை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
| --- | --- | --- | --- | --- |
| 1 | பில்லேகொடைபத்தேனை .. | பத்தேனை .. | உடப்பேருவை கோவிலில் இருக்கிற சீலநட்டன குருக்கள் | 0 0 3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிககு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ௵ சித்திரை மாசம் 11 ந் தேதியிலன்று சாயந்தரம் 2 மணிக்கு வதுளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிககும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

வதுளைக் கச்சேரி,
1932 ௵ மாசி௴ 20 ந் ௳.

டீ. ஏ. ஹொட்சன்,
ஊவா மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரம்.

### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நொம்பர் 93 (புத்தளம்).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எவற்றிற்கேனும் அல்லது அவைகளின் எப்பங்குக்கேனும் தமககு உரித்துண்டென்று 1932 ம் ஆண்டு (பெப்ருவரி) மாசி௴ 26 ந் திகதி தொடக்கம் மூன்று மாசகாலத்திற்குள் கீழே கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்துமுடிககப்படுமென்று மேற்செல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதத்தாலறிவிக்கப்படுகின்றது.

1931 ம் ௵ (நவம்பர்) கார்த்திகை௴ 30 ந் தேதி புத்தளம் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

வே. குமாரசுவாமி,
உதவி அரசாட்சி ஏசன்டு, புத்தளம்—சலாப டிஸ்திறிக்குகள்.

குறிப்பு—(a) இக்காணிகளைப்பற்றிய மறு விபரங்கள் புத்தளம் உதவி அரசாட்சி ஏசன்டுவிடத்திலு மவைகளின் படங்கள் அளவைக் கந்தோர் தலைவரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

வடமேன் மாகாணம், புத்தளம் டிஸ்திறிக், கற்பிட்டி டிவிசன் அக்கரைப்பற்று வடக்கு அல்லது மாம்புரி, கரையடிப்பூவன் என்னும் கிராமத்திலுள்ள பின்வரும் காணித்துண்டுகள் :—

I.—பிரதமபடம் இல. 7,335.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
| --- | --- | --- | --- | --- |
| 1 | கண்டன்சேனை (கடற்கருகே சேமிக்கை) | 2 | 3 | 3 |
| 2 | கண்டன்சேனை .. .. | 8 | 0 | 34 |
| 3 | கண்டன்சேனைகாடு .. .. | 12 | 1 | 9 |
| | | 23 | 1 | 6 |

பின்வரு மெல்லைகளை யுடையன: வடககு-கருக்குச்சேனை கிராமத்தின் ஊர் எல்லைகள் ; கிழக்கு-கரையடிப்பூவலிலிருக்கும் வ. அல்வறுது துலெண்டீனு என்பவரால் உரித்தாடப்பட்ட கண்டன்சேனைதோட்டம் (பி. ப. 7,335 ல் 4 ம் துண்டு) ; தெற்கு-ஆலங்குடா கிராமத்தி னெல்லைகள் ; மேற்கு-கடல்.

II.—பிரதமபடம் இல. 7,335.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
| --- | --- | --- | --- | --- |
| 5 | கண்டன்சேனை .. .. | 1 | 2 | 23 |

பின்வரு மெல்லைகளையுடையது: வடக்கு-கருக்குச்சேனை கிராமத்தி னெல்லைகள் ; கிழக்கு-கரையடிப்பூவலிலிருக்கும் வ. அல்வறுது துலெண்டீனுவாலும் முடியாலும் உரித்தாடப்பட்ட கண்டன்சேனைதோட்டமும் (பி. ப. 7,335 ல் 9 ம் துண்டு), புத்தளம் த. இ. க. கமீதுவின் உரித்தாளரா லுரித்தாடப்பட்ட கண்டன்சேனைதோட்டமும் (பி. ப. 7,335 ல் 8 ம் துண்டு) ; தெற்கு-கரையடிப்பூவல் வ. அல்வறுது துலெண்டீனுவாலும் முடியாலும் உரித்தாடப்பட்ட கண்டன்சேனைதோட்டம் (பி. ப. 7,335 ல் 6 ம் துண்டு) ; மேற்கு-கரையடிப்பூவல் வ. அல்வறுது துலெண்டீனுவா லுரித்தாடப்பட்ட கண்டன்சேனைதோட்டம் (பி. ப. 7,335 ல் 4 ம் துண்டு).

III.—பிரதமபடம் இல. 7,335.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
| --- | --- | --- | --- | --- |
| 7 | கண்டன்சேனை .. .. | 18 | 1 | 30 |

பின்வரு மெல்லைகளையுடையது: வடக்கு-கருக்குச்சேனை கிராமத்தி னெல்லைகள் ; கிழககு-முடியாலும் புத்தளம் த. இ. க. கமீதுவின் உரித்தாளராலும் உரித்தாடப்பட்ட கண்டன்சேனைதோட்டமும் (பி. ப. 7,335 ல் 10 ம் துண்டு), புத்தளம் த. இ. க. கமீதுவின் உரித்தாளரால் உரித்தாடப்படும் கண்டன்சேனையும் (பி. ப. 7,335 ல் 11 ம் துண்டு), புத்தளம் த. இ. க. கமீதுவின் உரித்தாளரால் உரித்தாடப்பட்ட கண்டன்சேனைதோட்டமும் (பி. ப. 7,335 ல் 12 ம் துண்டு) ; தெற்கு-ஆலங்குடா கிராமத்தி னெல்லைகள் ; மேற்கு-கரையடிப்பூவல் வ. அல்வறுது துலெண்டீனுவால் உரித்தாடப்பட்ட கண்டன்சேனைதோட்டமும் (பி. ப. 7,335 ல் 4 ம் துண்டு), முடியாலும் கரையடிப்பூவல் வ. அல்வறுது துலெண்டீனுவாலு முரித்தாடப்பட்ட கண்டன்சேனைதோட்டமும் (பி. ப. 7,335 ல் 6 ம் துண்டு), புத்தளம் த. இ. க. கமீதுவின் உரித்தாளராலு முரித்தாடப்பட்ட கண்டன்சேனைதோட்டமும் (பி. ப. 7,335 ல் 8 ம் துண்டு), முடியாலும் கரையடிப்பூவல் வ. அல்வறுது துலெண்டீனுவாலும் உரித்தாடப்பட்ட கண்டன்சேனைதோட்டமும் (பி. ப. 7,335 ல் 9 ம் துண்டு).

IV.—பிரதமபடம் இல. 7,335.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
| --- | --- | --- | --- | --- |
| 13 | கண்டன்சேனை .. .. | 150 | 2 | 26 |

பின்வரு மெல்லைகளையுடையது : வடக்கு-கருக்குச்சேனை கிராமத்தி னெல்லை ; கிழககு-கே. பி. எஸ். சேகுகந்தரா லுரித்தாடப்பட்ட மூபுதோட்டமும், ஆலங்குடா கே. பி. எஸ். சேகுகந்தராலும் தேவி எஸ். அலித்தம்பி மரைக்காயராலும் கோவிலின் தத்துவகாறராலும் முடியாலும் உரித்தாடப்பட்ட கண்டன்சேனை (பி. ப. 7,335 ல் 14 ம் துண்டு); தெற்கு-ஆலங்குடா கிராமத்தி னெல்லைகள் : மேற்கு-புத்தளம் த. இ. க. கமீதுவின் உரித்தாளரால் உரித்தாடப்பட்ட கண்டன்சேனை தோட்டமும் (பி. ப. 7,335 ல் 12ம் துண்டு), புத்தளம் த. இ. க. கமீதுவின் உரித்தாளரால் உரித்தாடப்பட்ட கண்டன்சேனை தோட்டமும் (பி. ப. 7,335 ல் 11 ம் துண்டு), முடியாலும் புத்தளம் த. இ. க. கமீதுவின் உரிததாளராலும் உரித்தாடப்பட்ட கண்டன்சேனை தோட்டமும் (பி. ப. 7,335 ல் 10 ம் துண்டு).

## சுப்பிறீங் கோட்டு அறிவித்தல்கள்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் மேற்குப் பிரிவின் கிறிமினெல் வழக்குவிசாரணை, 1932 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 21 ந் திகதியாகிய திங்கள் கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,

ஜே. ஏ. முல்ஹல்,
மேல் மாகாண பிஸ்காலுக்காக.

கொழும்பு பிஸ்கால் கந்தோர்,
1932 ம் ஸ்ரீ பெப்ருவரிமீ 19 ந் உ.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் இரத்தினபுரி டிஸ்திறிக்கடைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1932 ம் ஆண்டு பங்குனி மாதம் 21 ம் திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,

சீ. எச். கொலின்ஸ்,
பிஸ்கால், சபரகமுவா.

இரத்தினபுரி பிஸ்கால் கந்தோர்,
1932 ம் ஸ்ரீ மாசிமீ 22 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.